வாசிக்க: ஆதியாகமம் 18:11-19

***"அவன் தன் வீட்டார் எல்லாரோடும் கடவுளிடத்தில் விசுவாசமுள்ளவனாகி, மனமகிழ்ச்சியாயிருந்தான்" (அப் 16:34ஆ)***

இல்லத்தில் விசுவாசக் காற்று வீசுவது பேருவகை தரும். ஆபிரகாம் தனிப்பட்ட நபராக மட்டுமல்ல, குடும்பமாகவும் கடவுளை விசுவாசித்தான், அவருக்குக் கீழ்ப் படிந்தான். வசதியான வீடுவாசலைவிட்டு இடம் பெயர்வது ஆண்களைவிடப் பெண்களுக்குக் கடினம். இக்கட்டத்தில் சாராளைக் குறித்து வேதம் குறிப்பாக ஒன்றையும் சொல்லாவிட்டாலும், ஊரைவிட்டுப் புறப்படும்படிக் கடவுள் அழைத்ததை ஆபிரகாம் சாராளுக்குச் சொன்னபோது அவள் முழுமனதோடு சம்மதித்தாள் என்பது தெளிவு. ஆபிரகாமின் அழைப்பையே தனது அழைப்பாக அவள் ஏற்றுக்கொண்டாள். கணவர் மனைவியர் இவ்விதம் ஒருவரோடொருவர் ஒத்துழைத்தால் இன்னும் எத்தனையோ ஆயிரம் மிஷனரிகள் பாருக்குள் செல்ல முடியும். பொதுவாகக் கடவுள் கணவரைத்தான் அழைப்பார். மனைவி தனது தலையைப் பின்பற்றவேண்டும். ''விசுவாசத்தினாலே சாராளும்'' எனும் சொற்றொடரைக் கவனியுங்கள் (எபி 11:11).

ஊரை விடுவதற்கான அழைப்பில் மட்டுமல்ல, ஈசாக்கைப் பலியிடக் கடவுள் கொடுத்த கட்டளையிலும் அவருக்குக் கீழ்ப்படிய ஆபிரகாமோடு சாராள் தோள் கொடுத்து நின்றாள். அதிகாலையில் ஆபிரகாம் எழுந்து பலிகொடுக்கவேண்டிய இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றது சாராளுக்குத் தெரியாமல் போய்விடவேண்டும் என்பதற்கல்ல! மோரியா மலை வெகு தூரத்திலிருந்தது. நெடுந்தூரப் பயணத்தை ஒரு நாளின் அதிகாலையில் துவங்குவது நடைமுறை ஞானமே தவிர வேறல்ல (ஆதி 22:1-4). தனது செத்த கர்ப்பத்தை கடவுளால் உயிர்ப்பிக்க முடியுமானால் தன் மகனைப் பலியிட்டாலும் உயிரொடெழுப்பவும் அவரால் முடியுமென சாராள் விசுவாசித்தாள் (எபி 11:11).

பெற்றோரில் ஒருவர் அல்லது இருவருமே தடுப்பதால் இளைஞர் பலர் இறைப்பணிக்குச் செல்லமுடியாது இருக்கின்றனர். இந்நிலை மிகவும் கண்டிக் கத்தக்கது. ஆனால் கடவுளுக்குக் கீழ்ப்படிதலே பிரதானம் என்ற கோட்பாடுள்ள இல்லங்களில் வளரும் பிள்ளைகள் பாக்கியவான்கள். தனது பிள்ளைகளையும் கீழ்ப்படிதலில் பயிற்றுவிப்பானென்று ஆபிரகாமைக் குறித்துக் கடவுள் முன்ன றிந்திருந்தார் (ஆதி 18:17-19; எபி 11:9). ஆபிரகாம் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து கொண்டிருந்தததால், ஈசாக்கு தனது தந்தைக்குக் கீழ்ப்படிந்து ஒத்துழைத்தான். இல்லையேல், கட்டப்பட்டு பலிபீடத்தில் கிடத்தப்பட எந்த வாலிபன் சம்மதிப்பான்?

கோத்திரப் பிதாவாகிய ஆபிரகாமையும் கோத்திர மாதாவாகிய சாராளையும் பின்பற்றி நாமும் நமது பிள்ளைகளை விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் வளர்ப்போம். கீழ்ப்படிதலைவிட அறிவையே விரும்பும் மனிதர் வாழும் இவ்வுலகில் நாம் விரும்ப வேண்டியது கூடுதல் அறிவையல்ல, கூடுதல் கீழ்ப்படிதலையே. ஒருவரை நம்பாமல் அவர் சொல்வதைச் செய்வது சுலபமல்ல. விசுவாசமின்றிக் கீழ்ப்படிதலில்லை; கீழ்ப்படிதலின்றி விசுவாசத்தில் பயனில்லை. குடும்ப வாழ்விற்கு இவை இரு இறக்கைகள்போல!

*விசுவாசம் விசுவாசத்தையும், கீழ்ப்படிதல் கீழ்ப்படிதலையும் பிறப்பிக்கும்!*